



# Voice of Jagadguru

advaitam paramanandam


an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)


An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை



மனிதனுக்கு சௌக்கியமாக இருக்க இந்திரிய நிக்ரஹம் மிகவும் அவசியமானது. அது இல்லாதவன் கஷ்டங்கள் மேல் கஷ்டங்களைத் தான் அனுபவிக்க வேண்டிவரும். இந்திரிய நிக்ரஹம் என்றால் புலனை அடக்குதல். உதாரணமாக கண் ஒரு பதார்த்தத்தைப் பார்க்கும், காது ஒன்றைக் கேட்கும், நாக்கு ஒரு பதார்த்தத்தை விரும்பும். இப்படி ஒவ்வொன்றும் ஒவ்வொரு பதார்த்தத்தை "வேண்டும் வேண்டும்" என்று தன் இஷ்டத்திற்கு மனிதனை இழுத்துக்கொண்டு போனால், அவன் கதி என்ன ஆகும்? அந்த அந்த இந்திரியங்களுக்குப் பிடித்ததை சம்பாதித்து கொடுத்துக்கொண்டு இருந்தால் அதற்கு ஒரு முடிவே இருக்காது. எவ்வளவு கிடைத்தாலும் திருப்தி வராது. ஆசை வைத்த பொருள் கிடைக்குமா? கிடைத்தது போய் விடுமோ என்ற கலக்கத்தினால் கோபமும், எரிச்சலும் மனதைப் பாழாக்கிக் கொண்டேயிருக்கும். இப்படி அசாந்தமான (அமைதியற்ற) மனதில் சுகம் எவ்விதம் உண்டாகும் என்று பகவானே கீதையில் கூறி உள்ளார். अशान्तस्य कुत:सुखम अஶாந்தஸ்ய குத:ஸுக2ம என்று ஆகையால் மனிதனுக்கு இந்திரிய நிக்ரஹம் மிகவும் தேவை, இதைத்தான் ஸ்ரீசங்காபகவர்பாதர் தன் பாஷ்யத்தில் விஸ்தாரமாக கூறினார். इन्द्रियाणां हि विषयसेवातृष्णात: निवृत्ति या तत् सुखं न विषय विषया तृष्णा | दुःख एव हि सा | न तृष्णायां सत्या मुखस्य गन्धमात्रमपि उत्पध्यते ।।
இந்த்3ரியாணாம்' ஹி விஷயஸேவாத்ரு'ஷ்ணாத: நிவ்ரு'த்தி யா தத் ஸுக2ம்' ந விஷய விஷயா த்ரு'ஷ்ணா | து3:க2 ஏவ ஹி ஸா | ந த்ரு'ஷ்ணாயாம்' ஸத்யா முக2ஸ்ய க3ந்த4மாத்ரமபி உத்பத்4யதே என்று. அதாவது இந்திரியங்களை தன் இஷ்டம்போல் அதன் அதன் விஷயத்திற்கு அலைய விடாமல் நிறுத்துவதுதான் சுகம். அலைய விடுவது சுகம் அல்ல. இந்திரியங்களை அதன் போக்கில் விட்டால் துக்கம்தான் மிஞ்சும். இதை நன்றாக புரிந்து கொண்டு இந்திரியங்கள் விரும்புகிற ஒன்றுமே சாஸ்வத சுகத்தை கொடுக்காது என்று மனதில் பதியவைத்து, கர்த்தவ்ய (கடமை) பாவத்தில் இருந்து வந்து வாழ்க்கையை நடத்துவது தான் தனக்கும் பிறருக்கும் நல்லது ஆகும்.


நன்றி - அம்மன் தரிசனம்



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஷண்மதம் - ஆறு பிரிவுகள்

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

### காணாபத்யம்



**23.** மஹா கணபதி

ஹஸ்தீந்த்ராநநம் இந்துசூடம் அருணஸ் சாயம் த்ரிநேத்ரம் ரஸாத்

ஆஸ்லிஷ்டம் ப்ரியயா ஸ பத்மகரயா ஸ்வாங்கஸ்தயா ஸந்ததம்

பீஜாபூர கதேக்ஷு கார்முக லஸச் சக்ராப்ஜ பாஸோத்பல

வ்ரீஹ்யக்ர ஸ்வவிஷாண ரக்நகலஸாந் ஹஸ்தைர் வஹந்தம் பஜே

சிறந்த யானை முகத்தை உடையவரும், பிறைச்சந்திரனை மணிமுடியில் தரித்தவரும், சிவந்த மேனியை உடையவரும், முக்கண்ணரும், தாமரையைக் கரத்தில் தாங்கிய அன்புக்குரிய தேவியை மடி மீதில் அமர்த்திக் கொண்டிருப்பவரும், மாதுளம்பழம், கதை, கரும்பு, வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோத்பலம், நெற்கதிர், தந்தம் முதலியவற்றைக் கரங்களில் தரித்தவரும், துதிக்கையில் ரத்ன கலசம் தாங்கியருளுபவருமான மஹாகணபதியைத் துதிக்கிறேன்.

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

**24.** ஏகாக்ஷர கணபதி



ரக்தோ ரக்தாங்க ராகாம் ஸூக

குஸூமயுதஸ்தும் திலஸ் சந்த்ரமௌலி:

நேத்ரைர் யுக்தஸ்த்ரிபி: வாமநகர

சரணோ பீஜபூரம் ததாந:

ஹஸ்தாக்ரா க்ல்ருப்த பாஸாங்குஸ ரதவரதோ


நாகவக்த்ரோऽஹி பூஷோ

தேவ:பத்மாஸநஸ்தோ பவது ஸூககரோ


பூதயே விக்நராஜ:

சிவந்த நிறப் பட்டாடை அணிந்து, சிவப்பு நிற மலர் மாலையுடன், செந்நிறத் திருமேனியும், பிறை அணிந்த் திருமுடியும் கூடியவராக, முக்கண்களும், சிறிய அளவிலான (குள்ளமான) கரங்கள்-கால்கள் உடையவராக, மாதுளம்பழம், அங்குசம், பாசம், வரதம் கைகளில், யானை முகம், நாகம் ஆபரணம் ஆகியவற்றையும், ஐஸ்வர்யத்தின் அறிகுறியாகக் கிளியையும் கரங்களில் தாங்கியவராக, பத்மாசனத்தில் அமர்ந்து அருளும், ஏகாக்ஷர கணபதியாம் விக்னராஜனைத் துதிக்கிறேன்.

(தொடரும்...)



# Voice of Jagadguru



advaitam paramanandam

an e-magazine on advaita

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

## தசமஹா வித்யா

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

உண்மையான பக்தியுடன் தச மஹா வித்யா தேவியரை வழிபடும் சாதகர்கள், உயர்ந்த ஞானத்தையும், தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்ற நான்கு புருஷார்த்தங்களையும் அடைவர். அதைப் போலவே லௌகீகமாக மஹேந்த்ரஜாலம், மாரணம், உச்சாடனம், மோஹனம், ஸ்தம்பனம், வித்வேஷணம் போன்ற சக்திகளையும் அடைவர்.



ஸ்ரீ தசமஹாவித்யா ப்ரார்த்தனை

1. காலத்தின் வடிவமான ஸ்ரீ காளி நம்மை அறியாமை இருளிலிருந்து காப்பாற்றட்டும்
2. இந்தப் பிறவியிலேயே ஸ்ரீ வித்யா ஞானம் பெற்று வாழ்வு பயனுடையதாக ஸ்ரீ மஹா திரிபுரசுந்தரி அருள் செய்யட்டும்
3. ஆணவம், கர்மம், மாயை அழிந்து ஞானம் பெற ஸ்ரீ திரிபுர பைரவி அருள் செய்யட்டும்
4. வாழ்வின் துன்பம் எல்லாம் ஸ்ரீ தூமாவதி அருளால் மறையட்டும்
5. பிறவிப்பெருங்கடலை எளிதில் கடந்திட ஸ்ரீ தாராம்பிகை அருள் செய்யட்டும்
6. சகல செல்வங்களும் ஸ்ரீ புவனேச்வரி அருளால் கிடைக்கட்டும்
7. ஐம்புலன்களும் மனமும் அடங்கிட சஷ்டி தேவியாகிய ஸ்ரீ சின்னமஸ்தா அருள் புரியட்டும்
8. ஞான ஒளியாகிய அறிவொளி திக்கெட்டும் பரவிட ஸ்ரீ ராஜ மாதங்கி அருள் செய்யட்டும்
9. எதிரிகளின் சூழ்ச்சியை ஸ்தம்பிக்கச் செய்து ஸ்ரீ பகளாமுகி தர்மம் வெல்ல ரக்ஷிக்கட்டும்
10. வாழ்வில் அஷ்ட ஐஸ்வர்யங்களும் நிறைந்து, வறுமை, கடன் அற்ற, செல்வச் செழிப்பினை வழங்கி, எல்லோரும் எல்லாமும் பெற்று சமத்துவத்தோடும், சாந்தி சமாதானத்தோடும் உலகமே அமைதிப்பூங்காவாக திகழ்ந்திட ஸ்ரீ கமலதாரிணி அருள் பூரணமாக நிறையட்டும்.

இந்த பத்து பிரார்த்தனைகளையும் அகில உலகிற்கும் அன்னையான ஸ்ரீ புவனேச்வரி தேவி நிறைவேற்றி அருள் செய்யட்டும் !

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# நவராத்திரி

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

வசந்த நவராத்ரியின் சிறப்பை விளக்கும் கதையைப் பார்போம்:



கோசல நாட்டை ஆண்டு வந்த த்ருவசிந்து என்னும் மன்னன் வேட்டைக்குச் சென்ற போது சிங்கத்தினால் கொல்லப்படுகிறான். அவனுக்குப் பிறகு அவனுடைய இரு மனைவிகளுள் ஒருத்தியான மனோரமவிர்க்குப் பிறந்த சுதர்சனனை அரசனாக்க ஏற்பாடுகள் நடக்கின்றன. அப்பொழுது துருவசிந்துவின் மற்றொரு மனைவி லீலாவதி மூலம் பிறந்த மகனுக்கே பட்டம் சூட்டப் பட வேண்டும் என்று லீலாவதியின் தகப்பனாரான உஜ்ஜைனி அரசர் யுதாஜித் கலகம் செய்கிறார். அவரோடு போரிட்ட மனோரமாவின்தந்தை கலிங்க தேச அரசர் வீரசேனர் யுத்தத்தில் மாண்டு போகிறார்

இதை கேள்விப்பட்ட மனோரமா தன் மகன் சுதர்சனனையும் உதவிக்கு ஒரு அடிமையையும் அழைத்துக்கொண்டு கானகம் சென்று பரத்வாஜ முனிவரிடம் தஞ்சம் அடைகிறாள்.
லீலாவதியின் தகப்பனார் யுதாஜித் அவர் விரும்பியபடி தன் பேரனான ஷத்ருஜித்திர்க்கு பட்டம் சூடிய பிறகு மனோரமாவையும் அவள் மகன் சுதர்சனனையும் கொல்வதற்காக காட்டிற்கு வருகிறான். அவர்களை தன்னிடம் ஒப்படைக்கும்படி பரத்வாஜரிடம் வேண்ட, தன்னிடம் அடைக்கலமாக வந்தவர்களை தான் கை விட முடியாது என்று கூறிவிடுகிறார். அவரோடு யுத்தம் செய்ய முற்பட்டவனை அவரின் மகத்துவத்தைக் கூறி அமைச்சர் தடுத்து விட நாடு திரும்புகிறான்.

பரத்வாஜரின் ஆஸ்ரமதிற்கு வருகை புரிந்த சில ரிஷி குமாரர்கள் மனோரமாவின் அடிமையை "க்லீபன்" என்று அழைக்கிறார்கள். இதை கேட்ட சிறுவனாகிய சுதர்சனனுக்கு க்லீபன் என்று கூப்பிட வராததால், 'க்லீம்' என்று அழைக்கத் தொடங்குகிறான். க்லீம் என்பது அம்பாளின் பீஜ மந்த்ரமாதலால் அதை மீண்டும் மீண்டும் உச்சரித்த சுதர்சனனுக்கு அம்பிகை காட்சி அளித்ததோடு சக்தி வாய்ந்த வில் மற்றும் எடுக்க எடுக்க குறையாத அம்புராத்துனியையும் அளிக்கிறாள். நாளடைவில் அழகிய யுவனாக வடிவெடுத்த சுதர்சனனைக் கண்ட காசி தேச அரண்மனை ஊழியர்கள் காசி தேச இளவரசியான சசிகலாவிற்கு

(தொடரும்...)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

# தேவி வழிபாடு

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த ஹாஸ்வாமிகள்)





**14.** ஜ்வாலா மாலினி

இந்த நித்யா தேவி நெருப்பு ஜ்வாலை ரூபமாய் இருப்பவள். பண்டாசுரனுடன் லலிதாதேவி நடத்திய யுத்தத்தில் நூறு யோஜனை நீளமும் முப்பது யோஜனை அகலமும் முப்பது யோஜனை உயரமும் கொண்ட நெருப்புக் கோட்டையைப் படைத்தவள். அக்னியையே மாலையாகக் கொண்டவள். இந்த அம்பிகையின் வித்யை அறுபது அட்சரங்களைக் கொண்டது. வைடூர்ய மகுடம் அணிந்து அக்னி ஜ்வாலையைப் போல் சிவந்து காட்சியளிக்கும் இத்தேவிக்கு ஆறுமுகமும் பன்னிரு கரங்களும் உள்ளன. கரங்களில் அங்குசம், கத்தி, வில், நெருப்பு, கதை, பாசம், கேடயம், தாமரை, சூலம், அம்பு, அபயம், வரதம் தாங்கியுள்ளாள். பல்வேறு அணிகலன்களைச் சூடிய இவளது ஒவ்வொரு திருமுகத்திலும் புன்முறுவலும் முக்கண்களும் உள்ளன. இவளை தேவரும் முனிவரும் சதா சூழ்ந்துள்ளனர்.

மந்திரம்:
ஓம் ஜ்வாலாமாலின்யை வித்மஹே மஹாஜ்வாலாயை தீமஹி
தன்னோ தேவி ப்ரசோதயாத்.

வழிபட வேண்டிய திதிகள்:
சுக்ல பட்ச சதுர்த்தசி, கிருஷ்ண பட்ச த்விதியை

வழிபடு பலன்கள்:
எந்தத் துன்பமும் தீயிலிட்ட பஞ்சுபோல் ஆகும். பகைவர்கள் அழிவர்.



Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

**15.** சித்ரா

திதி நித்யா தேவிகளில் பதினைந்தாம் நித்யா தேவியான சித்ரா, பளபளவென மின்னும் கிரணங்களை வீசிடும் திருமேனியவள். பல்வேறு ரத்னங்கள் பதித்த மகுடத்தில் பிறைமதி சூடியவள். வெண்பட்டாடை உடுத்தி, பல்வகையான ஆபரணங்களை மேனி முழுதும் அணிந்து அழகே வடிவாய்த் திகழ்கின்றாள். பாசம், அங்குசம், அபயம், வரதம் தரித்த நான்கு திருக்கரங்கள் கொண்ட இவள், பக்தர்களின் பயத்தை நாசம் செய்பவள். சர்வானந்தமயி என்றும் நிலையானவள். கனவிலும், நினைவிலும் அடியவர்கள் இதயத்தில் வீற்றிருப்பவள். உதிக்கின்ற சூரியனைப்போல் ஞான ஒளி வீசி அறியாமை இருளை விரட்டுபவள். அண்டங்கள் அனைத்திலும் மகிமை வெளிப்படத் திகழ்பவள். தனிப்பெரும் பரம்பொருள்.




மந்திரம்:
ஓம் விசித்ராயை வித்மஹே மஹா நித்யாயை தீமஹி
தன்னோ தேவிப்ரசோதயாத்.

வழிபட வேண்டிய திதிகள்:
பௌர்ணமி, கிருஷ்ண பட்ச பிரதமை.

வழிபடு பலன்கள்:
திடீர் அதிர்ஷ்டமும், பெரும் செல்வமும் சேரும்.

(தொடரும்...)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

**3.**முதல் யாத்திரை

இந்த பரிவாரத்திற்கு தக்கபடி மடத்து அதிகாரிகளும் சிப்பந்திகளும் இருந்திருப்பார்கள். பின்னால் சிஷ்ய ஸ்வாமிகளுடன் வந்த யாத்திரையில் இன்னம் ஜாஸ்தியாகவே இருந்திருக்கு மென்பதில் ஸந்தேகமில்லை. ஆனால் அக்காலத்தில் ஸ்ரீமத் ஆசார்யார் எல்லா கிராமங்களுக்கும் விஜயம் செய்வதென்ற முறையில்லாமல் பிரதானமான நகரங்களிலும் க்ஷேத்திரங்களிலுமே தங்குவார்கள். பிராந்தியத்திலுள்ள சுற்று கிராமங்களிலிருந்து அங்கேயே வந்து தர்சித்து அனுக்ரஹம் பெற்றுக்கொண்டு போவார்கள்.



ஸ்ரீமகாஸ்வாமிகளும் அவர்கள் குருஸ்வாமிகளும்.


சிஷ்ய ஸ்வாமிகளுடன் காளஹஸ்தி, திருப்பதி, காஞ்சீபுரம் முதலான க்ஷேத்திரங்களுக்கு போய்விட்டு சென்னைப் பட்டணத்திற்கு வந்து சுமார் ஒன்பது மாஸம் வரை அங்கே தங்கி சிஷ்யர்களை ஸ்ரீமத் ஆசார்யார் விசேஷமாக அனுக்ரஹித்தார்கள். அந்த சமயம் கவர்னராயிருந்த லார்டு நேபியர் என்ற பிரபு இவர்களை தர்சித்து விசேஷ மதிப்பு வைத்திருந்ததாக அவர் கடிதத்திலிருந்து தெரிகிறது. யாத்திரையில் நடந்த ஸம்பவங்களையெல்லாம் குறிப்பிடுவது ஸாத்தியமில்லை. சின்ன ஸ்வாமிகளுக்கு பெரியவரிடம் இருந்த திருடமான பக்தியை காட்டக்கூடிய ஒரு ஸம்பவத்தை மாத்திரம் குறிப்பிடலாமென்று நினைக்கிறேன். திருநெல்வேலிக்கு இருவர்களும் விஜயம் செய்திருந்த ஸமயம் ஒருநாள் அங்குள்ள ஸ்ரீ நெல்லையப்பர் கோவில் யானைக்கு மதம் பிடித்து அறுத்துக் கொண்டு ரதவீதிகளில் அட்டஹாஸம் செய்துகொண்டு ஸஞ்சரிக்க ஆரம்பித்துவிட்டது. வீதிகளில் ஜன நடமாட்டமே கிடையாது. அவ்வளவு பேர்களும் பயத்தினால் தன் தன் வீட்டுக்குள் கதவு சாத்திக்கொண்டு ஒளிந்து கொண்டார்கள். இவ்விஷயத்தை ஸ்ரீமத் ஆசார்யாரிடம் விக்ஞாபனம் செய்தவுடன் அவர்கள் சின்னவரைக் கூப்பிட்டு, தன் கமண்டலுவிலிருந்து கொஞ்சம் ஜலம் எடுத்து அவர் கமண்டலுவில் விட்டு, அந்த யானையை அழைத்து வரும்படி உத்தரவிட்டார்கள். உடனே அந்த பால ஸ்வாமிகள் கொஞ்சமேனும் யோசிக்காமல் ஏகாங்கியாய் ரத வீதிகளில் நடந்து சென்று தெற்கு ரத வீதியின் மேற்கு கடைசியில் பீலிட்டுக் கொண்டிருந்த யானையிருக்குமிடம் போய் கமண்டலு ஜலத்தை அதன் மேல் புரோக்ஷணம் செய்தார். அது உடனே தும்பிக்கையை கீழே இறக்கிற்று. அந்த தும்பிக்கையை தன் கையில் வளைத்துப் பிடித்துக்கொண்டு நேரே மடத்திற்கு


அழைத்து வந்துவிட்டார். பிறகு அதுவும் மதம் தெளிந்து கோவிலில் ஒப்புவிக்கப்பட்டது. 16-வயது பாலர் இவ்விதம் நிர்ப்பயமாய் தைரியமாய் செய்யவேண்டுமானால் குருநாதருடைய வாக்கியத்திலிருந்த திருடமான விசுவாஸத்தைத் தவிர வேறு என்ன காரணம் சொல்ல முடியும் ?



இவ்விதமாக பற்பல பிரதேசங்களில் ஸஞ்சாரம் செய்து அங்கங்குள்ள ஜனங்களை அனுக்ரஹித்துக் கொண்டு ஈசுவர வருஷம் ஆஷாடபகுள த்விதீயை (27-7-1877) சுக்ர வாரத்தன்று சிருங்கேரிக்கு ஸ்ரீமத் ஆசார்யார் சிஷ்ய ஸ்வாமிகளுடன் விஜயம் செய்தார்கள். ஆக இந்த யாத்திரை பன்னிரண்டு வருஷகாலமாகி விட்டது. சிருங்கேரிக்கு திரும்ப வந்தபோது ஸ்ரீமத் ஆசார்யாருக்கு வயது எண்பது: சின்ன ஸ்வாமிகளுக்கு இருபது.

சின்ன ஸ்வாமிகள் ஸன்யாஸம் பெற்றவுடன் குருநாதருடன் தக்ஷிண யாத்திரையாக புறப்பட்டு விட்டதால் அவர்கள் சிருங்கேரிக்கு முதல் தடவையாக விஜயம் செய்வதே இப்பொழுதுதான், சிருங்கேரி மஹா ஜனங்கள் பன்னிரண்டு வருஷ காலமாக வெளியில் ஸஞ்சாரம் செய்து கொண்டிருந்த பெரிய ஸ்வாமிகளவர்களையும், புதிதாக சிருங்கேரிக்கு விஜயம் செய்யும் சின்ன ஸ்வாமிகளவர்களையும் வெகு உத்ஸாஹத்துடன் வரவேற்றர்கள் என்பது சொல்லவும் வேண்டுமோ? பெரிய ஸ்வாமிகளை தங்கப்பல்லக்கிலும், சின்ன ஸ்வாமிகளை வெள்ளிப் பல்லக்கிலும் அலங்கரித்து பட்டணப் பிரவேசம் அதி கோலாஹலமாய் நடந்தது. இதில் ஒரு விசேஷ ஸம்பவம் குறிப்பிட வேண்டியதுண்டு. அக்ரஹார மத்தியில் ஊர்வலம் வந்து கொண்டிருக்கையில் சின்ன ஸ்வாமிகளவர்களின் மனஸில் தன்னைத் தெரியாமலே "நாமும் தங்கப் பல்லக்கில் ஏறக்கூடிய காலம் வரும்" என்று ஒரு விருத்தி க்ஷணிகமாய்த் தோன்றி மறைந்தது. ஊர்வலம் முடிந்து மடத்து வாசலில் பல்லக்குகள் இறங்கினவுடன் சின்ன ஸ்வாமிகள் இறங்கி விட்டார். பெரியவர் பல்லக்கிலிருந்தபடியே சின்ன ஸ்வாமிகளைக் கூப்பிட்டு "தங்கப் பல்லக்கில் ஏறவேண்டுமென்று தோன்றிற்றோ?" என்று கேட்டார்கள். சின்ன ஸ்வாமிகள் திடுக்கிட்டு "அப்படித் தோன்றவில்லை. நானும் ஏறும் காலம் வரும் என்று தோன்றிற்று என்றார். அதற்குப் பெரிய ஸ்வாமிகள் "தங்கப் பல்லக்கில் வெறுமென ஏறிவிடலாமென்று நினைக்காதே" என்று சொல்லி விட்டு, பக்கத்திலிருந்த உக்கிராணத்திலிருந்து கொஞ்சம் நெல் கொண்டு வரச் சொல்லியனுப்பி அந்த நெல் வந்தவுடன் அதில் ஒரு பிடி கையில் எடுத்துக் கொண்டு தங்கப்பல்லக்கிலிருந்து இறங்கி தான் உட்கார்ந்திருந்த இடத்தில் அந்த நெல்லை தெளித்தார்கள். அது உடனே பொரியாக மாறி விட்டது. "பார்த்தாயா? தங்கப் பல்லக்கில் ஏற வேண்டுமானால் இவ்வளவு தபஸ் ஏற வேண்டும். ஸாமான்யமாய் உட்கார்ந்து விடலாமென்று நிவாக்காதே" என்றார்கள்.









இதிலிருந்து முன்னை விட குருநாதரிடம் இவருக்கு பயமும் பக்தியும் ஏற்பட்டதுடன்,

(தொடரும்…)

## श्रीमन्नारायणीयम्

## ஶ்ரீமந்நாராயணீயம்

### २. श्रीभगवद्रूपवर्णनम्

### 2. ஶ்ரீப⁴க³வத்³ரூபவர்ணனம்

एवंभूतमनोज्ञतानवसुधानिष्यन्दसन्दोहनं
त्वद्रूपं परचिद्रसायनमयं चेतोहरं शृण्वताम् ।
सद्यः प्रेरयते मतिं मदयते रोमाञ्चयत्यङ्गकं
व्यासिञ्चत्यपि शीतबाष्पविसरैरानन्दमूर्च्छोद्भवैः ॥ ६ ॥

क्षेत्रज्ञाय नमः

ஏவம்பூ⁴தமனோஜ்ஞதானவஸுதா⁴நிஷ்யந்த³ஸந்தோ³ஹனம்’
த்வத்³ரூபம்’ பரசித்³ரஸாயனமயம்’ சேதோஹரம்’ ஶ்ரு’ண்வதாம் |
ஸத்³ய: ப்ரேரயதே மதிம்’ மத³யதே ரோமாஞ்சயத்யங்க³கம்’
வ்யாஸிஞ்சத்யபி ஶீதபா³ஷ்பவிஸரைரானந்த³மூர்ச்சா²த்³ப⁴வை: ||6||

க்ஷேத்ரஜ்ஞாய நம:

ஹே குருவாயூரப்பா! முன்பே கூறப்பட்டவாறு தங்கள் திருவுருவம் அழகாகிற அமுதத்தைப் பெருக்குவதாகவும்; பரமானந்த ரஸத்தின் களஞ்சியமாகவும் (பரப்பிரம்ம ஸ்வரூபமாகவும்): கேட்போரின் மனதைக் கவருவதாகவும் உள்ளது. அதாவது ஏதேச்சையாக பக்தன் ஒருவன் பகவானுடைய திருவிளையாடல்களைக் கேட்க நேரிடின் உடனே அது அவனது காது வழியாக இதயத்தில் புகுந்து அனைத்துப் பாவங்களையும் போக்குகிறது. அப்படி ஒரு முறை கேட்பவனை மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டுகிறது. ஆனந்த பரவசமாக்குகிறது. உடலை மயிர்க்கூச்செரியச் செய்கிறது. ஆனந்தத்தால் உண்டாகும் குளிர்ந்த ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கி இவ்வுடலையே நனைத்து விடுகிறது.

க்ஷேத்ரஜ்ஞாய நம: = க்ஷேத்திரத்தை அறிந்தவர்

एवंभूततया हि भक्त्यभिहितो योगः स योगद्वयात्
कर्मज्ञानमयाद्भृशोत्तमतरो योगीश्वरैर्गीयते ।
सौन्दर्यैकरसात्मके त्वयि खलु प्रेमप्रकर्षात्मिका
भक्तिर्निःश्रममेव विश्वपुरुषैर्लभ्या रमावल्लभ ॥ ७ ॥

अक्षराय नमः

ஏவம்பூ⁴ததயா ஹி ப⁴க்த்யபி⁴ஹிதோ யோக³: ஸ யோக³த்³வயாத்
கர்மஜ்ஞானமயாத்³ப்⁴ரு’ஶோத்தமதரோ யோகீ³ஶ்வரைர்கீ³யதே |
ஸௌந்த³ர்யைகரஸாத்மகே த்வயி க²லு ப்ரேமப்ரகர்ஷாத்மிகா

## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ப⁴க்திர்நி꞉ஶ்ரமமேவ விஶ்வபுருஷைர்லப்⁴யா ரமாவல்லப⁴ ||7||

அக்ஷராய நம꞉

ஹே லக்ஷ்மீகாந்தார் குருவாபூரப்பா! இவ்வாறு பக்தியோகம் மிக்க பெருமை வாய்ந்ததாக இருப்பதாலல்லவா வியாஸர் முதலிய யோகீசுவரர்கள் அதை கர்மயோக, ஞானயோகங்களைக் காட்டிலும் மிகச் சிறந்ததென்று புகழ்கிறார்கள். இத்தகைய அன்பின் எல்லை நிலமான பக்தியோகம் அழகே வடிவெடுத்த தங்களிடத்தில் எவ்வித முயற்சியுமின்றியே அனைவராலும் எளிதில் பெறக்கூடியதாக அல்லவா இருக்கிறது.

அக்ஷராய நம꞉ = தேய்வுருதவர்



निष्कामं नियतस्वधर्मचरणं यत्कर्मयोगाभिधं
तद्दूरेत्यफलं यदौपनिषदज्ञानोपलभ्यं पुनः ।
तत्त्वव्यक्ततया सुदुर्गमतरं चित्तस्य तस्माद्विभो
त्वत्प्रेमात्मकभक्तिरेव सततं स्वादीयसी श्रेयसी ॥ ८ ॥

योगाय नमः


நிஷ்காமம்' நியதஸ்வத⁴ர்மசரணம்'
யத்கர்மயோகா³பி⁴த⁴ம்'
தத்³தூ³ரேத்யப²லம்'
யதௌ³பநிஷத³ஜ்ஞானோபலப்⁴யம்' புன꞉ |
தத்த்வவ்யக்ததயா ஸுது³ர்க³மதரம்' சித்தஸ்ய
தஸ்மாத்³விபோ⁴
த்வத்ப்ரேமாத்மகப⁴க்திரேவ ஸததம்' ஸ்வாதீ³யஸீ
ஶ்ரேயஸீ ||8||

யோகா³ய நம꞉

ஹே பிரபுவான குருவாயூரப்பா! கர்மங்கள் நித்யம் (தினந்தோறும் செய்யப்பட வேண்டிய ஸந்த்யாவந்தனம், தேவ பூஜை முதலியன), நைமித்திகம் (எப்பொழுதோ செய்யப்பட வேண்டிய வேள்வி முதலியன) என்று பலவகையாகவுள்ளன. அவற்றைப் பயனில் கருத்தின்றிச் செய்வதால் மனம் தூய்மை பெற்று வைராக்கியமுண்டாகிப் பின் ஞானமுண்டாகும். ஆகவே இவை உடனே பலனளிக்க வல்லனவல்ல. நாளடைவிலேயே பயனளிப்பவை, உபநிஷத்துக்களின் வாயிலாகக் கேட்டறிந்த ஞானமும் மோக்ஷத்தையளிக்கவல்லதே. ஆனால் அது மனம், புலன்களுக்குப் புலப்படாததாகையால் அதன் மூலம் பெறப்படும் ஞானம் எளிதில் அடைய முடியாததாக இருக்கிறது. ஆகையால் தங்களிடம் வைக்கப்படும் பிரேமையே வடிவான பக்தியொன்றே எப்பொழுதும் இன்பத்தையளிப்பதாகவும், பிரம்மா முதலியவர்களாலும் புகழத்தக்கதாகவும் இருக்கிறது.

யோகா³ய நம꞉ = யோகமாயும் யோகத்தால் பெறப்படுபவராயும் உள்ளவர் .


अत्यायासकराणि कर्मपटलान्याचर्य निर्यन्मलाः
बोधे भक्तिपथेऽथवाप्युचिततामायान्ति किं तावता ।
क्लिष्ट्वा तर्कपथे परं तव वपुर्ब्रह्माख्यमन्ये पुन-



# Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita




## ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

श्चित्तार्द्रत्वमृते विचिन्त्य बहुभिः सिद्ध्यन्ति जन्मान्तरैः ॥ ९ ॥

योगविदां नेत्रे नमः

அத்யாயாஸகராணி கர்மபடலான்யாசர்ய நிர்யன்மலாः
போ³தே⁴ ப⁴க்திபதே²(அ)த²வாப்யுசிததாமாயாந்தி கிம்' தாவதா |
க்லிஷ்ட்வா தர்கபதே² பரம்' தவ வபுர்ப்³ரஹ்மாக்²யமன்யே புன-
ஶ்சித்தார்த்³ரத்வம்ரு'தே விசிந்த்ய ப³ஹுபி⁴ः ஸித்³த்⁴யந்தி ஜன்மாந்தரைः ||9||

யோக³விதா³ம்' நேத்ரே நமः

ஹே குருவாயூரப்பா! மிக்க முயற்சியும், ஈடுபாடும் கொண்டு ஆற்றக் கூடிய கர்மாக்களை அனுஷ்டித்து, அதன் மூலம் மனதில் உள்ள மாசு நீங்கியவர்களாக ஞானயோகத்திற்கோ, பக்தியோகத்திற்கோ தகுதியைப் பெறுபவர் சிலர். அதனால் ஆவது என்ன? (பயன் ஒன்றுமில்லையே), மற்றும் சிலரோவெனில் காதலாகிக் கசிந்து உள்ளம் நெகிழாது, தர்க்க மார்க்கத்தில் (வேதாந்த வழியில்) பெரிதும் வருந்தி 'பிரம்மம்' என்ற சிறப்புப் பெயர் கொண்ட தங்கள் திருமேனியைத் தியானித்து அதாவது அறிவிற்கெட்டாத பிரம்மரூபமாகத் தியானித்து), பல பிறவிகளெடுத்து அதன் பிறகு பேரானந்தத்தை (மோக்ஷத்தை) அடைகின்றனர்.
யோக³விதா³ம்' நேத்ரே நமः = யோகம் அறிந்தவர்களை அழைத்துச் செல்பவர் .

त्वद्भक्तिस्तु कथारसामृतझरीनिर्मज्जनेन स्वयं
सिद्ध्यन्ती विमलप्रबोधपदवीमक्लेशतस्तन्वती ।
सद्यः सिद्धिकरी जयत्ययि विभो सैवास्तु मे त्वत्पद-
प्रेमप्रौढिरसार्द्रता द्रुततरं वातालयाधीश्वर ॥ १० ॥

प्रधानपुरुषेश्वराय नमः (२०)

த்வத்³ப⁴க்திஸ்து கதா²ரஸாம்ரு'தஜ²ரீ நிர்மஜ்ஜனேன ஸ்வயம்'
ஸித்³த்⁴யந்தீ விமலப்ரபோ³த⁴பத³வீமக்லேஶதஸ்தன்வதீ .
ஸத்³யः ஸித்³தி⁴கரீ ஜயத்யயி விபோ⁴ ஸைவாஸ்து மே த்வத்பத³-
ப்ரேமப்ரௌடி⁴ரஸார்த்³ரதா த்³ருததரம்' வாதாலயாதீ⁴ஶ்வர .. 10 ..

ப்ரதா⁴னபுருஷேஶ்வராய நமः (20)

ஹே விபுவான குருவாயூரப்பா! தங்களுடைய கதையாகிற அமுத வெள்ளத்தில் மூழ்கித் திளைப்பதனால் தங்களிடம் பக்தி தானாகவே உண்டாகிறது. அதன் மூலம் தூய்மையான பிரம்மஞானத்தின் ஸித்தி உடனே எளிதிலேயே கிடைக்கின்றது. பிறவிப் பயனை அளித்து வெற்றியுடன் விளங்குகின்றது. உங்களுடைய திருவடிகளில் முதிர்ந்த அன்புச் சுவையினால் கனிந்து விளங்கும் அத்தகைய பக்தியே எனக்கு விரைவில் உண்டாக வேண்டும். ஹே பிரபு ! என் வியாதி கூட்டங்களை அழித்து அருள்புரியுங்கள்.
ப்ரதா⁴னபுருஷேஶ்வராய நமः = பிரகிருதிக்கும் ஜீவனுக்கும் ஈஸ்வரன் .


Our Mail ID : Info@voiceofjagadguru.com


ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்